Commissioner of Social Welfare
21 JUN 2019

<u>சுருக்கம்</u>

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – பணிக்காலத்தில் காலமாகும் சத்துணவு சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கல்வித் தகுதியின் அடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தில் – கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந4–2) துறை,</u>

அரசாணை (நிலை) எண். 30 நாள். 17 .06.2019

திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி ஆனி 2

படிக்கப்பட்டவை:–

1. அரசு கடித எண்.37910/சஉதி–3/92–2, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 06.11.1992.
2. அரசாணை (நிலை) எண். 215, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 08.09.1998.
3. அரசாணை (நிலை)எண்.163, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 18.08.2010.

மேலும் படிக்கப்பட்டவை:–

4. சமூக நல ஆணையர் அவர்களின் கடித ந. க. எண்.5641/சஉதி–1/2018 நாள். 18.12.2018.

-----

<u>ஆணை:–</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் பணிபுரிந்து பணியிடைக் காலமாகும் அமைப்பாளர்களின் வாரிசுதாரர்களில், தகுதியான ஒருவருக்கு, அவரது கல்வித் தகுதி, வயது வரம்பு, வாரிசுரிமை, குடும்பத்தில் உள்ள பிறர் அரசு பணியிலிருப்பது போன்ற விவரங்களை ஆய்வு செய்து அரசின் முன் அனுமதி பெற்று கருணை அடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்டத்தில் சத்துணவு அமைப்பாளராகப் பணி நியமனம் வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணிபுரிந்து பணியிடைக் காலத்தில் இறந்துவிடும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களின் வாரிசுதாரர்களை, அவர்களது வயது வரம்பு, வாரிசுரிமை, குடும்பத்தில் உள்ள பிறர் அரசுப் பணியிலிருப்பது போன்ற விவரங்களை ஆய்வு செய்து, தகுதிக்கேற்ப அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே சத்துணவு மைய சமையலர், மற்றும் உதவியாளர் பணியிடங்களில் கருணையடிப்படையில் பணி நியமனம் செய்யலாம் என்றும் பின்னர் அது பற்றிய விவரங்களை உடனடியாக அரசுக்கு தெரிவிக்கவேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல ஆணையர் அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பணியாற்றி பணியிடைக் காலமாகும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களது வாரிசுகளுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் கோரி பெறப்படும் விண்ணப்பங்களை ஆய்வு செய்யும்பொழுது பெரும்பாலான விண்ணப்பதாரர்கள் சத்துணவு அமைப்பாளர் பணிக்கான குறைந்த பட்ச கல்வித் தகுதி 10–ம் வகுப்பு தேர்ச்சி அல்லது கூடுதல் கல்வித் தகுதி பெற்றவர்களாக உள்ளதால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணிபுரிந்து பணியிடைக் காலமாகும் சமையலர் அல்லது சமையல் உதவியாளர்களின் வாரிசுதாரர்கள், சத்துணவு அமைப்பாளர் பணிக்கான கல்வித் தகுதி உட்பட ஏனைய தகுதிகளை நிறைவு செய்யும் நிலையில், பெண் வாரிசுதாரர்களுக்கு சத்துணவு அமைப்பாளராகக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளித்தும், ஆண் வாரிசுதாரராக இருப்பின் அரசிற்கு தக்க முன்மொழிவுகளை அனுப்பி அரசின் முன் அனுமதி பெற்று கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் வகையிலும், சமையல் உதவியாளர்களின் வாரிசுதாரர்கள் சமையலர் பதவிக்குரிய கல்வித் தகுதி பெற்று ஏனைய தகுதிகளை நிறைவு செய்திருப்பின் பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் சமையலராகப் பணி நியமனம் வழங்க சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளித்தும், ஆண் வாரிசுதாரராக இருப்பின் அரசிற்கு தக்க முன்மொழிவுகளை அனுப்பி அரசின் முன் அனுமதி பெற்று கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் வகையில் அரசாணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

4. சமூக நல ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, பின்வருமாறு ஆணைகளை வெளியிடுகிறது:–

i. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பணியாற்றி, பணியிடைக் காலமாகும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களின் பெண் வாரிசுதாரர்களின், கல்வித் தகுதி, வயது வரம்பு, வாரிசுரிமை மற்றும் குடும்பத்தில் உள்ள பிறர் அரசுப் பணியிலிருப்பது போன்ற விவரங்களை ஆய்வு செய்து சத்துணவு அமைப்பாளர் பணிக்கான கல்வித் தகுதி உட்பட ஏனைய தகுதிகளை நிறைவு செய்யும் வாரிசுதாரருக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் கருணை அடிப்படையில் சத்துணவு அமைப்பாளராகப் பணி நியமனம் வழங்க சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

ii. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் பணிபுரிந்து, பணியிடைக் காலமாகும் சமையல் உதவியாளர்களின் பெண் வாரிசுதாரர்களின் கல்வித் தகுதி, வயது வரம்பு, வாரிசுரிமை, குடும்பத்தில் உள்ள பிறர் அரசுப்பணியில் இருப்பது போன்ற விவரங்களை ஆய்வு செய்து சமையலர் பணிக்கான கல்வித் தகுதி உட்பட ஏனைய தகுதிகளை நிறைவு செய்யும் வாரிசுதாரருக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தில் கருணை அடிப்படையில் சமையலராகப் பணி நியமனம் வழங்க சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

iii. மேற்காணும் நடைமுறைகளைப் பின்பற்றி கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கிய பின்னர் அது பற்றிய விவரங்களை அரசிற்கு அளிக்குமாறும் பணி நியமனங்களை மேற்கொள்ளும்பொழுது மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தூரச்சுற்றளவு குறித்த நிபந்தனையைப் பின்பற்றுமாறும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

iv. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தில் பணிபுரிந்து பணியிடைக் காலமாகும் சமையலர் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ஆண் வாரிசுதாரர்கள் மட்டுமே இருக்கும் நிலையில், அவ்வாரிசுதாரர்களின் கல்வித் தகுதி, வயது வரம்பு, வாரிசுரிமை, குடும்பத்தில் உள்ள பிறர் அரசுப்பணியில் இருப்பது போன்ற விவரங்களை ஆய்வு செய்து சத்துணவு அமைப்பாளர் அல்லது சமையலர் பணிக்கான கல்வித் தகுதி உட்பட ஏனைய தகுதிகளை நிறைவு செய்யும் வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க ஏதுவாக மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பாலின நிபந்தனையிலிருந்து தனியருக்கு விலக்களிக்கக் கோரி உரிய முன்மொழிவுகளை அரசிற்கு அனுப்பி அரசின் முன் அனுமதி பெற்று சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம்.

v. இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. மணிவாசன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்,
சமூக நல ஆணையர், சென்னை – 15.
இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
தரமணி, சென்னை–113.
ஆணையர், சென்னை பெருநகர மாநகராட்சி, சென்னை–3
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,

நகல்:–
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை--9.
முதன்மைச் செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத்
திட்டத் துறை அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
சென்னை – 9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

பிரிவு அலுவலர் 20.6.2019

20/6/19